நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
எம்.ஆர்.சி. நகர். சென்னை–28.

ந.க..எண். 22660 /2018/டிபி3 நாள். 03.06.2019.

## சுற்றறிக்கை

பொருள்: கட்டிட அனுமதி எளிமைப்படுத்தும் பணி மற்றும் ஒற்றைச் சாளார முறையில் பெறப்படும் கட்டிட விண்ணப்பங்கள் மீது ஆய்வுச் செய்து அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு தொழிற்சாலைகள் மற்றும் ஏற்றுமதி வழிகாட்டுத் துறை நேர்முக கடித எண். Policy / EODB / CMA / 1 / 2019 நாள்: 13.05.2019.
2. தலைமைச் செயலாளர் அவர்களின் ஆய்வுக்கூட்டம் தேதி : 02.02.2019 மற்றும் 21.05.2019.

*********

தலைமைச் செயலாளர் அவர்களால் 02.02.2019 மற்றும் 21.05.2019 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் துறையால் வழங்கப்படும் கட்டிட மற்றும் திட்ட அனுமதியை இணையத்தளம் வாயிலாக குறிப்பிட்ட காலவரையரைக்குள் வழங்கப்படுவது குறித்தும், இதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவது குறித்தும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. வணிக சீர்திருத்த நடவடிக்கை திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கட்டிட அனுமதி விண்ணப்பமும் அல்லது திட்ட அனுமதி விண்ணப்பமும் 48 மணி நேரத்திற்குள் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வறிக்கை உடனடியாக இணையதளத்தில் சம்பந்தப்பட்ட அலுவலரால் பதிவுச் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. மேலும் கட்டிட அனுமதி விண்ணப்பங்கள் மீதான இறுதி முடிவு 30 தினங்களுக்குள் முழுமையாக முடிக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது எனவே ஒவ்வொரு கட்டிட அனுமதி விண்ணப்பமும் இணையதளம் வாயிலாக பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட நகரமைப்பு ஆய்வாளர், இளநிலை பொறியாளர் 48 மணி நேரத்திற்குள் ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டுமென இதன் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது. உரிய காலத்திற்குள்

இப்பணி நடைபெறுவதனை சம்பந்தப்பட்ட ஆணையாளர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:–** மாதிரி படிவங்கள்.

ஓம் / – தா. கார்த்திகேயன்
நகராட்சி நிர்வாக ஆணையர்

**பெறுநர்–** அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்

நகல்– அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது.//

3/6/19
கண்காணிப்பாளர்